RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 164 | ஜுன்.21 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “நேரலை நிறுத்தம், பேரவை விவாத வீடியோ ‘எடிட்’ மிகப் பெரிய தவறு” : உதயநிதி காட்டம்

சென்னை: ஜுன்.21-

“சட்டப்பேரவை நடவடிக்கைகளின் நேரலை நிறுத்தப்பட்டது மிகப் பெரிய தவறு. அதேபோல், எதிர்க்கட்சியினரின் விவாதங்கள் முற்றிலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டு, ஆளுங்கட்சியினருக்கு வேண்டிய விவாத வீடியோக்கள் மட்டும் எடிட் செய்யப்பட்டு மாலையில் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் பேச்சுரிமையை நசுக்கும் செயல், நல்லதொரு ஆக்கப்பூர்வமான சட்டப்பேரவை ஜனநாயகத்துக்கு உகந்தது இல்லை” என்று சபாநாயகர் ஜேசிடி பிரபாகருக்கு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் காட்டமாக குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தின் விவரம்: தமிழ்நாடு சட்டப்பேரவையின் நடவடிக்கைகள் நேரலை செய்யப்படும் என்று முதல்வர் அளித்த வாக்குறுதிக்கு மாறாக, தற்போது நடைபெற்று வரும் ஆளுநர் உரை மீதான விவாதம் நேரலை செய்யப்படுவதில்லை என்பதைத் தங்களது மேலான கவனத்துக்கு கொண்டுவருகிறேன்.

"கொடுத்த வாக்கைக் காப்பாற்றியுள்ளார் முதல்வர். இரண்டு, மூன்று ஆண்டுகளாக இருட்டடிப்புச் செய்யப்பட்ட சட்டப்பேரவை நேரலை, மீண்டும் தொடங்கியிருக்கிறது. இனி சட்டப்பேரவை நேரலை தொடரும். இது ஜனநாயகத்துக்கு மிகப் பெரிய எடுத்துக்காட்டு. வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மையான நிர்வாகத்திற்கு இன்றைய நிகழ்வு மிகப்பெரிய எடுத்துக்காட்டு" என அமைச்சர் ராஜ்மோகன் குறிப்பிட்டுச் சொன்ன அன்றே நேரலை துண்டிக்கப்பட்டிருக்கிறது.



மேகேதாட்டு அணை கட்டுவதைக் கண்டித்து முதல்வர் கொண்டு வந்த அரசினர் தீர்மானத்தின் மீதான விவாதங்கள் நேரலை செய்யப்பட்டன. அடுத்து, உடனடியாக இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் உரை மீதான விவாதங்கள் தொடங்கிய நிலையில், அவை இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன. ஆளுநர் உரை மீதான விவாதம் நேரலை செய்யப்படவில்லை. இது இன்றைய ஆளுங்கட்சி கொடுத்த வாக்குறுதிக்கு மாறானது ஆகும். மக்கள் பிரதிநிதிகளின் குரலை மறைப்பது ஆகும். சட்டப்பேரவை மாண்பைக் குலைப்பதாகும்.

நேரலை நிறுத்தப்பட்டது மிகப் பெரிய தவறு என்றால், அதைவிடப் பெரிய தவறு பின்னர் இழைக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினரின் விவாதங்கள் முற்றிலும் இருட்டடிப்புச் செய்யப்பட்டு, ஆளுங்கட்சியினருக்கு வேண்டிய விவாத வீடியோக்கள் மட்டும் எடிட் செய்யப்பட்டு மாலையில் வெளியிடப்பட்டுள்ளன. பேச்சுரிமையை, அதிலும் குறிப்பாகச் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு அவைக்குள் இருக்கும் பேச்சுரிமையை நசுக்கும் செயலாகும். இது நல்லதொரு ஆக்கப்பூர்வமான சட்டப்பேரவை ஜனநாயகத்துக்கு உகந்தது இல்லை.

மாற்றம்' என்ற சொல்லை மையமாக வைத்துத் தேர்தலைச் சந்தித்தவர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்களின் குரலை நசுக்குவதுதான் அவர்கள் செய்ய நினைக்கும் மாற்றமா? மக்கள் பிரதிநிதிகளின் பேச்சை மறைப்பது மக்களையே அவமானப்படுத்துவது ஆகும்.

இந்த அரசு வெளிப்படைத்தன்மை உடைய அரசு என்ற பொருள்பட முதல்வர் பலமுறை பேசிய நிலையில், இப்போது அதற்கு முரணாக அவை விவாதங்களை, குறிப்பாக எதிர்க்கட்சியினரின் விவாதங்களை, வாக்களித்த மக்கள் தெரிந்துகொள்ள விடாமல் செய்வது ஜனநாயகத்தையே இருட்டில் தள்ளுவதற்குச் சமம். மேலும், ஜனநாயகத்தின் நான்காவது தூண் எனப் போற்றப்படும் ஊடகங்களுக்குச் செய்திகளை வழங்க மறுப்பதும், அரைகுறைச் செய்திகளை அளிப்பதும், "நாங்கள் தருவதை மட்டுமே ஒளிபரப்ப வேண்டும்" என்று சொல்வதும் பாசிச நடவடிக்கைகள் ஆகும்.

ஒரே நேரத்தில் சட்டப்பேரவை, மக்கள் பிரதிநிதிகள், ஊடகங்கள் ஆகிய அனைத்தையும் அவமானப்படுத்தும் செயல் செய்யப்பட்டுள்ளது. உடனடியாக இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுகிறேன். வரும் திங்கட்கிழமையன்று (22.06.2026) எதிர்க்கட்சித் தலைவரான நானும், பிற தலைவர்களும், சட்டப்பேரவை உறுப்பினர்களும் உரையாற்ற உள்ளதால், தமிழ்நாடு சட்டப்பேரவையின் நடவடிக்கைகளை நேரலை செய்வதற்குத் தங்களுக்கு உள்ள பேரவைத் தலைவர் அதிகாரத்தைப் பயன்படுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இல்லாவிட்டால் சட்டப்பேரவை கூடுவதற்கான அர்த்தமே இல்லாமல் போய்விடும்; மக்கள் அளித்த வாக்குக்கே மரியாதை இல்லாமல் போய்விடும். சட்டப்பேரவையையும் சட்டப்பேரவை உறுப்பினர்களையும் அவமானப்படுத்தும் இதுபோன்ற செயல்களை இனியும் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# மதுரை, சிவகங்கை ஆட்சியர்கள் உட்பட தமிழக ஐஏஎஸ் அதிகாரிகள் இடமாற்றம்

சென்னை: ஜுன்.21-

மதுரை, சிவகங்கை மாவட்ட ஆட்சியர்கள் உட்பட தமிழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் உள்ள ஐஏஎஸ் அதிகாரிகள், பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.



இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மாநகர போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் டி. பிரபுஷங்கர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநராக நியமனம். சென்னை மாநகர சுகாதாரத்துறை இணை ஆணையர் ஜெயசீலன், சுற்றுலாத்துறை இயக்குநராக நியமனம். மேலும், இவர், தமிழக சுற்றுலாத்துறை வளர்ச்சிக் கழக நிர்வாக இயக்குநராகவும் செயல்படுவார்.

மதுரை மாவட்ட ஆட்சியர் ஆகாஷ், சிவகங்கை மாவட்ட ஆட்சியராக நியமனம். சிவகங்கை மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா மதுரை மாவட்ட ஆட்சியராக நியமனம்.

ஈரோடு வணிக வரித்துறை இணை ஆணையர் பொன்மணி, இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையராக நியமனம். இன்னசன்ட் திவ்யா, கோஆப்டெக்ஸ் நிர்வாக இயக்குநராக நியமனம். கோஆப்டெக்ஸ் நிர்வாக இயக்குநரான கவிதா ராமு, டுபிட்கோ நிர்வாக இயக்குநராக நியமனம்.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரான டி. மோகன், பெருநகர போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநராக நியமனம். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநரான ஷ்ரேயா பி சிங், சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை இணை ஆணையராக நியமனம். தமிழ்நாடு பைபர்நெட் கார்பரேஷன் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரான ரமண சரஸ்வதி, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநராக நியமனம் செய்யப்படுகிறார்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆவடி, தாம்பரத்துக்கு புதிய காவல் ஆணையர்கள்

சென்னை: ஜுன்.21-

ஆவடி மற்றும் தாம்பரம் காவல் ஆணையரகத்துக்கு புதிய காவல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் தவெக அரசு பொறுப்பேற்றதை அடுத்து பல்வேறு துறைகளில் ஐஏஎஸ், ஐபிஎஸ் உள்ளிட்ட அதிகாரிகள் மாற்றப்பட்டு வருகின்றனர்.





காவல் துறையை பொருத்தவரை, சட்டம் ஒழுங்கு டிஜிபி மற்றும் உளவுத்துறை முதல் லஞ்ச ஒழிப்புத் துறை வரை அதிகாரிகள் மாற்றப்பட்டுள்ளனர். சரக டிஐஜி, மாவட்ட எஸ்.பி.க்களும் தொடர்ந்து மாற்றப்பட்டு, அவர்களுக்கு புதிய பணியிடம் ஒதுக்கப்பட்டு வருகிறது.

நிர்வாக வசதிக்காகவும், பொதுமக்களின் சேவையை மேம்படுத்துவதற்காகவும் இந்த மாற்றங்கள் செய்யப்பட்டு வருவதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அந்த வகையில், ஆவடி காவல் ஆணையராக இருந்த பிரேம் ஆனந்த் சின்ஹா தாம்பரம் காவல் ஆணையராகவும், டிஜிபி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் தலைமையிடத்து கூடுதல் டிஜிபி செந்தில் குமார் ஆவடி காவல் ஆணையராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான உத்தரவை உள்துறை செயலர் கே.மணிவாசன் பிறப்பித்துள்ளார்.

# சட்டப்பேரவை கூட்ட தேதி அறிவித்த பிறகு வெள்ளை அறிக்கை வெளியிட்டது ஏன்? : அமைச்சர் மரிய வில்சன் பதில்

சென்னை: ஜுன்.21-

தமிழக சட்டப்பேரவையில் ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நேற்று நடைபெற்றது.



இதில் அருர் தொகுதி அதிமுக எம்எல்ஏ சம்பத்குமார் பேசும்போது, ‘‘சட்டப்பேரவை கூட்டத்தொடர் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில், தமிழக அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கையை, ஏன் கூட்டத்தொடருக்கு முன்பாகவே வெளியிட வேண்டும். சட்டப்பேரவையில் வெளியிட்டிருக்கலாமே’’ என்றார்.


இதற்கு நிதியமைச்சர் மரிய வில்சன் பதில் அளித்து பேசியதாவது: தமிழகத்தின் தற்போதைய நிலை மக்கள் அனைவருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகத் தான், சட்டப்பேரவை கூடுவதற்கு முன்பாகவே முதல்வர் வெளியிட சொன்னார்.

அவரின்உத்தரவின்படியே, வெள்ளை அறிக்கையை வெளியிட்டோம். கடந்த 5 ஆண்டு திமுக ஆட்சியில், அதற்கு முந்தைய 60 ஆண்டுகளில் வாங்கிய கடனை விட அதிமாக கடன் வாங்கப்பட்டுள்ளது.

இன்று தமிழக மக்கள் ஒவ்வொருவரின் மீதும் ரூ.1.28 லட்சம் கடன் உள்ளது. இது மிகத்தெளிவாக மக்களிடம் சேர வேண்டும் என்பதற்காகவே வெளியிடப்பட்டது. இவ்வாறு அவர் பதில் அளித்தார்.







# மேலநெட்டூர் சொர்ணவாரீஸ்வரர் சுவாமி கோவில் ஆனி பிரம்ம உற்சவம் கொடியேற்றத்துடன் தொடக்கம்

மானாமதுரை, ஜுன்.21

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் சமஸ்தானம் தேவஸ்தானத்திற்கு உட்பட்ட மேலநெட்டூர் அருள்மிகு ஸ்ரீ சாந்தநாயகி அம்பாள் சமேத சொர்ணவாரீஸ்வரர் சுவாமி திருக்கோவிலின் 1435ம் பசலி, 2026ம் ஆண்டு ஆனி பிரம்ம உற்சவ பெருவிழா சனிக்கிழமை கொடியேற்றத்துடன் கோலாகலமாகத் தொடங்கியது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இத்திருக்கோவிலில் நடைபெறும் பத்து நாள் திருவிழா ஜுன் 29ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. விழாவின் முதல் நாளான நேற்று கன்னிகா லக்னத்தில் கொடியேற்றம் நடைபெற்றதைத் தொடர்ந்து சுவாமி சப்பரத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

திருவிழாவையொட்டி நாள்தோறும் சுவாமி, அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம், தீபாராதனை மற்றும் பல்வேறு வாகனங்களில் வீதி உலாக்கள் நடைபெற உள்ளன. ஜுன் 28ஆம் தேதி மாலை 4 மணிக்கு தேரோட்டமும், ஜுன் 29ஆம் தேதி தீர்த்த உற்சவம் மற்றும் வசந்த நீராடலுடன் விழா நிறைவடைய உள்ளது.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை சிவகங்கை சமஸ்தான தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் ராணி சாஹிபா ஸ்ரீமத் முத்துவிஜயரகுநாத கௌரிவல்லப டி.எஸ்.கே. மதுராந்தகி நாச்சியார் ஆலோசனையின் பேரில் தேவஸ்தான அதிகாரிகள் மற்றும் கிராம பொதுமக்கள் செய்து வருகின்றனர்.

# தேனி மாவட்டம் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன், விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

தேனி, ஜூன்.21-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது.

மாவட்டத்தில் ஜுன் மாதம் வரை ஆண்டு மழையளவான 304.20 மி.மீக்கு தற்பொழுது வரை 256.39 மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. இது ஜுன் மாதம் வரை ஆண்டு இயல்பான மழையளவில் 47.81 மி.மீ குறைவாகும். ஜுன் 2026 மாதத்திற்கான இயல்பு மழையளவான 27.60 மி.மீக்கு தற்பொழுது வரை 54.95 மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. இது ஜுன் மாத இயல்பான மழை அளவை காட்டிலும் 27.35 மி.மீ அதிகமாகும்.

தேனி மாவட்டத்தில் நடப்பாண்டு நெல் 587 ஹெக்டர் பரப்பிலும், சிறுதான்யம் 121 ஹெக்டர் பரப்பிலும், பயறு வகைகள் 373 ஹெக்டர் பரப்பிலும், தோட்டக்கலை பயிர்களான பழப்பயிர்கள் 7366 ஹெக்டர் பரப்பிலும், காய்கறி பயிர்கள் 146 ஹெக்டர் பரப்பிலும், மலைத்தோட்ட பயிர்கள் 11044 ஹெக்டர் பரப்பிலும், நறுமணப்பயிர்கள் 1738 ஹெக்டர் பரப்பிலும், மலர்ப்பயிர்கள் 525 ஹெக்டர் பரப்பிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை விரிவாக்க மையங்களில் நெல் விதை 100 மெ.டன்னும், சிறுதானியங்கள் 6 மெ.டன்னும், பயறு வகை விதைகள் 13 மெ.டன்னும், எண்ணெய்வித்துப் பயிர் விதைகள் 0.5 மெ.டன்னும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.





குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டத்தில் நெல் இயந்திர நடவு மற்றும் நெல் நேரடி விதைப்பிற்கு பின்னேற்பு மானியமாக ஏக்கர் ஒன்றிற்கு ரூ.4000/ வழங்கப்பட உள்ளது. தேனி மாவட்டத்திற்கு இலக்காக 1000 ஏக்கர் வரப்பெற்றுள்ளது. மேலும், நெல் நுண்ணூட்ட உரம் எக்கர் ஒன்றிற்கு 5 கிலோ வீதமும், திரவ உயிர் உரங்கள் ஏக்கர் ஒன்றிற்கு அரை லிட்டர் வீதமும் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படும். ஒரு விவசாயி அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை மானியம் பெற்று பயன்பெறலாம். 53 மெ.டன் நெல் விதை 50 சதவீத மானியத்தில் விநியோகம் செய்ய தயார் நிலையில் உள்ளது.

முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தில் தக்கைபூடு விதைகள் 50 சதவீத மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

துவரை பயிரானது நடவு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் சாகுபடி செய்யும் பொழுது மகசூல் அதிகரிக்கும் என ஆய்வுகள் முடிவுகள் தெரிவிக்கப் பட்டதைத்தொடர்ந்து, நடப்பாண்டு தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் நடவு தொழில்நுட்பம் மூலமாக துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டருக்கு ரூபாய் 10,000 வரை மானியம் வழங்கப்பட உள்ளது. தேனி மாவட்டத்திற்கு இலக்காக 620 ஏக்கர் வரப்பெற்றுள்ளது. தேனி மாவட்டத்தில் பாரதப் பிரதமரின் கௌரவ நிதி பெரும் திட்டத்தின் கீழ் மொத்தம் உள்ள 26050 பயனாளிகளில் இதுவரை 23,550 பயனாளிகள் மட்டுமே விவசாய அடையாள எண் பெற்றுள்ளார்கள். மீதமுள்ள பிற விவசாயிகளும் கௌரவ நிதித்திட்டத்தின் கீழ் தொடர்ந்து பயனடைய உடனடியாக விவசாய அடையாள எண்ணை பதிவுசெய்து கொள்ள வேண்டும்.

மேலும், திருப்பூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் சோதனை அடிப்படையில் விவசாய அடையாள எண்ணை அடிப்படையாகக் கொண்டு உர கடைகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் உரம் வழங்கும் திட்டமானது துவங்கப்பட உள்ளது. எனவே நிலம் வைத்துள்ள அனைத்து விவசாயிகளும் அடையாள எண்ணினை பெற ஆதார், ஆதார் உடன் இணைக்கப்பட்ட மொபைல் எண் மற்றும் நில ஆவணங்களான சிட்டா அல்லது பட்டா ஆகியவற்றுடன் அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி பதிவு செய்துகொள்ளலாம்

மேலும், இக்கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற மனுக்களுக்கு உரிய பதிலினை விவசாயிகளுக்கு வழங்கிட அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். முன்னதாக, தோட்டக்கலைமலைப்பயிர்கள் துறையின் சார்பில், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டம் 202627இன் கீழ் மா பரப்பு விரிவாக்கம் செய்வதற்கான இனத்தின்கீழ் ரூ.24,000/ மானியத்திலும், எலுமிச்சை பரப்பு விரிவாக்கம் செய்வதற்கான இனத்தின்கீழ் ரூ.15,000/ மானியத்திலும் மரக்கன்றுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார்.

மேலும், இக்கூட்டத்தில் கூட்டுறவுத்துறையின் சார்பில் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனை செய்யப்படும் உயிரி உரங்கள், இயற்கை உரங்கள் ஆகியவை விவசாயிகளின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய்அலுவலர் .ராஜகுமார், உதவி வன பாதுகாவலர் சாய்சரண் ரெட்டி ., வேளாண்மை இணை இயக்குநர் சாந்தாமணி, இணைப்பதிவாளர் (கூட்டுறவு) திருமதி நர்மதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) (பொ) ராஜசேகர் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப்பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கன்னியாகுமரியில் கந்துவட்டி கேட்டு மிரட்டுவதாக போலீசில் பெண் புகார்

கன்னியாகுமரி, ஜூன்.21-

சுவாமிதோப்பு பகுதியில் கந்துவட்டி கேட்டு மிரட்டுவதாக போலீசில் பெண் புகார் அளித்துள்ளார். தேநீர் கடை நடத்தும் வள்ளிமயில் என்பவர் பைனான்சியர் சரவணனிடம் வட்டிக்கு ரூ.50,000 கடன் பெற்றுள்ளார். ரூ.50,000க்கு ரூ.12,000 வட்டி எடுத்துக் கொண்டு ரூ.38,000 மட்டுமே பைனான்சியர் சரவணன் கொடுத்துள்ளார். தொடர்ந்து 100 நாள்கள் தினமும் ரூ.500 கொடுத்து ரூ.50,000ஐ கட்டிய நிலையிலும் பணம் கேட்டு மிரட்டுவதாக கூறியுள்ளார்.

## ஒரு பெண் உறுப்பினர் கூட நியமிக்கப்படவில்லை கனிமொழி கண்டனம்

சென்னை, ஜூன்.21-

தமிழ்நாடு அரசின் எம்.ஜி.ஆர். திரைப்படம் , தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் மாணவர் சேர்க்கைக்காக அமைக்கப்பட்ட குழுவில் ஒரு பெண் உறுப்பினர் கூட நியமிக்கப்படவில்லை என்று கனிமொழி கண்டனம் தெரிவித்துள்ளார். பல சவால்களைக் கடந்து திரைத்துறையில் கலைஞர்களாக தொழில்நுட்ப வல்லுநர்களாகப் பணியாற்றிவரும் பெண்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று கனிமொழி கூறியுள்ளார்

## தேனியில் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

## தமிழக வெற்றிக்கழக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிற்சங்கம் சார்பில் மாபெரும் ரத்ததான முகாம்

தேனி, ஜூன்.21-

தமிழ்நாடு முதலமைச்சரும் தமிழக வெற்றிக் கழக நிறுவன தலைவருமான ச.ஜோசப் விஜய் அவர்களின் 52 பிறந்தநாள் விழாவை தமிழ்நாடு முழுவதும் தமிழக வெற்றிக்கழக சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்க தலைமை கழகம் உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து தேனி உழவர் சந்தை அருகில் தமிழக வெற்றிக்கழக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிற்சங்க திண்டுக்கல் மண்டல பொறுப்பாளர்



கார்த்திக் ஏற்பாட்டில் மாபெரும் ரத்ததான முகாம் நடைபெற்றது. இந்த ரத்ததான முகாமை தமிழக வெற்றி கழக தேனி வடக்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ் தலைமையேற்று துவக்கி வைத்தார். தேனி தெற்கு மாவட்ட செயலாளர் லெப்ட் பாண்டி முன்னிலை வகித்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் தமிழக வெற்றிக் கழக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிற்சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் தவெக தொண்டர்கள், மருத்துவ செவிலியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். குருதி கொடையாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.



■ கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி வளாகத்தில், 32 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி நடைபெறவுள்ளதையடுத்து அரங்குகள் அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் பா.முகுந்தன் (கிருஷ்ணகிரி),ந. இளையராஜா (ஊத்தங்கரை), இ.சி.கோவிந்தராஜன் (பர்கூர்), மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.எஸ்.அனிதா, ஆகியோர் முன்னிலையில். நேற்று பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தனர். உடன் இணை இயக்குநர் (வேளாண்மை) க.உமா, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை)ஆஞ்சலின் பொன்ராணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## முதலமைச்சர் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு; சிவகங்கை த.வெ.க., மருத்துவரணி சார்பில் மாபெரும் மருத்துவ முகாம்

### மாசெ. முத்துபாரதி தலைமையில். எம்.எல்.ஏ.க்கள் குழந்தைராணி நாச்சியார். இளங்கோவன். திக்விஜய்பாண்டியன் ஏற்பாடு

சிவகங்கை, ஜூன்.21-

சிவகங்கை மாவட்ட தவெக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மாவட்டம் முழுவதும் தவெக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான ஜோசப் விஜயின் பிறந்தநாளை முன்னிட்டு வெகு விமரிசையாக கொண்டாடி வருகின்றனர்

குறிப்பாக அறுசுவை அன்னதானம் வழங்குதல். நலத்திட்ட உதவிகள் வழங்குதல் கல்வி உபகரணங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கிக் கொண்டாடி வருகின்றனர்.

குறிப்பாக சிவகங்கை தவெக மாவட்ட மருத்துவரணி சார்பில் மருத்துவ சிறப்பு முகாம் நடத்தி பொதுமக்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது.

சிவகங்கை மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் பாகை வாள் கோட்டை நாடு மருத்துவர் திக்விஜய்பாண்டியன் . மருத்துவர்கள் பாலமுருகன். மணி கண்டன். விக்னேஷ். கரு. கருப்பையா . சுரேஷ். ஜவஹர். மயில்வாகணன் ஆகியோரது ஏற்பாட்டில் காரைக்குடி அப்பல்லோ மருத்துவமனை . வாஸன் கண் மருத்துவவமனை இணைந்து சிவகங்கை நகரின் மையப்பகுதியான சிவன் கோவில் எதிர்புறம்



அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த முகாமினை சிவகங்கை மாவட்ட செயலாளர் முத்துபாரதி தலைமையேற்று தொடங்கி வைத்தார்.

மேலும் சட்டமன்ற உறுப்பினர்களான சிவகங்கை குழந்தை ராணி நாச்சியார் மானாமதுரை இளங் கோவன் ஆகியோர் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர்.

இந்த மருத்துவ முகாமில் சர்க்கரை . இதயம் . இரத்த அழுத்தம். பொதுமருத்துவம் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை மற்றும் மருத்துவ ஆலோசனைகளும் அளிக்கப்பட்டது.

தவெக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்று குருதிக்கொடையளித்தனர்.

இந்த நிகழ்ச்சியின் போது மருத்துவர் அஸ்லம் பாஷா. டமாவட்ட இணைச் செயலாளர் காளையார்கோவில் காளீஸ்வரன் . மாவட்ட பொருளாளர் கண்ணதாசன் . மாவட்ட இளைஞரணி தினேஷ் . மாவட்ட மாணவரணி தமறாக்கி பிரபு . மாவட்ட மகளிரணி தமிழரசி . மாவட்ட வர்த்தக அணி சசிக்குமார் . மாவட்ட தொண்டரணி சஞ்சய்.ஐடி விங் ஜனார்த்தனன். ஐடி விங் விஜய்பாலாஜி . மாவட்ட வழக்கறிஞரணி சூரக்குளம் சுரேஷ். மாவட்ட செயற்குழு முத்துக்குமார். மாவட்ட வர்த்தக அணி சார்லஸ். லெணினநகரச்செயலாளர் தளபதிகோபி . ஒன்றிய செயலாளர் களான சிவகங்கை தெற்கு வேம்பன்குடி பரமேஷ்வரன். சிவகங்கை மேற்கு மானாகுடி பில்லத்தி கண்ணன். திருப்புவனம் கிழக்கு திவாகர். திருப்புவனம் தெற்கு ராகுல். இளையான்குடி ராமலிங்கம். மாவட்ட மாணவரணி இணை கண்டிப்பட்டி பாலா . மாவட்ட மகளிரணி இணை அமைப்பாளர் சுதா. பாகம்பிரியாள் . உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தவெக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொணடு குருதிக்கொடையளித்தனர்.

இந்த நிகழ்ச்சியின் போது மாணவரணி இணை அமைப்பாளர் விக்னேஷ் . நகர செயற்குழு கார்த்திக். அல்லிநகரம் கணேசன். பனையனேந்தல் கண்ணன். வயல்சேரி விக்னேஷ். ஐடி விங் சங்கர். பாரி . துணைச்செயலாளர் ஜெயவிசாலாட்சி மாணவரணி விக்னேஷ். யோகேஷ். நகர் மாணவரணிசெந்தில்ராஜ் . மகளிரணி பிரியங்கா. நகர் சிவா . மகளிரணி லதா . கே. ஆர். பால்பாண்டியன். துணைச் செயலாளர் பெட்ரோல் பம்ப் ரமேஷ். அல்லூர் முனீஷ்வரன் . பழனிவேல்ராஜன். மானாமதுரை ஆரோக்கிய செல்வி . நகர் கலாதேவி . காளையார்கோவில் அருணாதேவி . துணைச் செயலாளர் முத்துப்பாண்டி இணைச்செயலாளர் கணேஷ் . பஜார் வைரம். மானாமதுரை ஜெயமாறன் . ரேகா . திவ்யபாரதி . ரேவதி. பொருளாளர் ஆனந்தபிரபு. பரத் . கலைச்செல்வி. மருது. சுமதி . வைகை ராஜேஷ் . கனி . ரஞ்சித். மகளிரணி லதா . ராஜேஷ்வரி தொண்டரணி இணை அமைப்பாளர் செல்வி. திருப்புவனம் ரம்யா உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தவெக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிவகங்கை தெற்கு மாவட்ட தவெக மருத்துவரணி மாவட்ட அமைப்பாளர் பாகைவாள்கோட்டை நாடு மருத்துவர் திக்விஜய்பாண்டியன் . மருத்துவர்களான பாலமுருகன். மணி கண்டன். விக்னேஷ். கரு. கருப்பையா. சுரேஷ். ஜவஹர். மயில்வாகணன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தார்.

## தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு பொழிச்சலூர் ஊராட்சி மேற்கு கிளை இணைச் செயலாளர் S. ஜான் சார்பில்

## பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது

பல்லாவரம், ஜூன்.21-

ஜூன் 22ல் தமிழ்நாடு முதல்வரும் தமிழக வெற்றி கழகத்தின் தலைவருமான ஜோசப் விஜய் 52 வது பிறந்த நாளை முன்னிட்டு செங்கல்பட்டு வடக்கு மாவட்ட பொழிச்சலூர் ஊராட்சி மேற்கு கிளை சார்பில் பொழிச்சலூர் ஊராட்சி பள்ளியில் பயிலும் 300 மாணவ மாணவிகள் மற்றும் அங்கன்வாடி குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி , பொழிச்சலூர் ஊராட்சி மேற்கு கழக செயலாளர் சுறா ரவி தலைமையில் பொழிச்சலூர் ஊராட்சி மேற்கு கிளை கழக இணை செயலாளர் ஜான் ஏற்பாட்டில், நடைபெற்றது,





இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பரங்கிமலை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் திருசூலம் ஆர். சங்கர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி பின்னர் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம், ஸ்கூல் பேக், வாட்டர் பாட்டில், டிபன் பாக்ஸ், உட்பட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தனர்.

மற்றும் நிகழ்ச்சியில் பொழிச்சலூர் மேற்கு ஊராட்சி கழக சார்பில் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

உடன் இந்நிகழ்ச்சியில் பரங்கிமலை வடக்கு ஒன்றிய செயற்குழு உறுப்பினர் பிரசாந்த், ஹர்ஷா, பொழிச்சலூர் மேற்கு ஊராட்சி பொருளாளர் நந்தகுமார், விஜயன், மாவட்ட தொண்டரணி வினோத் ,

ஒன்றிய செயற்குழு உறுப்பினர் ரதி வினோத், பிரபு, வினோத் குமார், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப பிரிவு பாலா, விக்னேஷ், குட்டியப்பன், சத்தி, ஒன்னாவது வார்டு செயலாளர் லோகு, 6வது வார்டு செயலாளர் பிரசாந்த், எட்டாவது வார்டு தீபக், 10மீஸ் வார்டு தலைமை ராஜன், ராஜேஷ், சரவணன், 13மீஸ் வார்டு பி.வளர்மதி, 13வது வார்டு இணைச்செயலாளர் மேரி, கவிநயா, பொழிச்சலூர் மேற்கு 14வது வார்டு இணைச்செயலாளர் ஜே.கார்த்தி, கமலேஷ், பொழிச்சலூர் மேற்கு ஊராட்சி துணைச் செயலாளர் சரஸ்வதி, மகேஷ் பாலா, பொழிச்சலூர் மேற்கு மகளிர் அணி எஸ்.இந்துமதி, சுபா, பரங்கிமலை வடக்கு ஒன்றிய தகவல் தூய்மைப்பு பிரிவு பாலா மற்றும் தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## எதிர்க்கட்சித் இளம் தலைவர் ராகுல் காந்தி பிறந்தநாளை முன்னிட்டு செங்கல்பட்டு தெற்கு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் வடக்கு வட்டாரம் ஒன்றியம் காங்கிரஸ் கட்சியின் சார்பில்

# மண்ணிவாக்கம் ஊராட்சியில் மிக சிறப்பாக கேக் வெட்டிக் பள்ளி மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்கி 300க்கும் மேற்பட்டவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது

மண்ணிவாக்கம், ஜூன்.21-

செங்கல்பட்டு மாவட்டம் மண்ணிவாக்கம் ஊராட்சியில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் கு.செல்வ பெருந்தகை அவர்களின் ஆணைக்கிணங்க பாராளு மன்ற எதிர்க்கட்சித் தலைவர் இளம் தலைவர் ராகுல் காந்தி அவர்களின் பிறந்த நாள் விழா நேற்று 19.06.2026 செங்கல்பட்டு தெற்கு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் வடக்கு வட்டாரம் ஒன்றியம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் மண்ணிவாக்கம் ஊராட்சியில் மிக சிறப்பாக கேக் வெட்டிக் பள்ளி



மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்கி 300க்கும் மேற்பட்டவர்களுக்கு அன்னதானம் வழங்கப் பட்டது இந்த நிகழ்ச்சி காட்டாங்குளத்தூர் வடக்கு வட்டார தலைவர் இரா.ஆனந்தராஜ் தலைமையில் மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் எம்.ஆர்.இளையராஜா,, வட்டார செய்லாளர் ஏ.பிரபு, கிளை தலைவர்கள் எம்.ஆர்.மோகன்ராஜ் என்.கதிரவன் ஆகியோர் முன்னிலையில் இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட தலைவர் ஜே.பி.பிரபு, மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் வி.பி.பெரோஸ் காந்தி, மாவட்டத் துணைத் தலைவர் ஜே.கே.பாலாஜி மற்றும் மண்ணிவாக்கம் நிர்வாகிகள் எம்.எம். பார்த்திபன், என்.கண்ணன், பி.தேவராஜ், தா.கருணாகரன், பி.ரமேஷ், மணிகண்டன், ஜி.சுகந்தி, நீலமேகன், பவுல் என்கின்ற முருகன், பொதுச் செயலாளர் ஆர்.நடராஜன், ஊரப்பாக்கம் காங்கிரஸ் கமிட்டி தலைவர் டி.செல்வம், ஊரப்பாக்கம் காங்கிரஸ் கமிட்டி பொருளாளர் சந்திரபோஸ், இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவர் எம்.முத்துவேல் மற்றும் காங்கிரஸ் வட்டார நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# உதகையில் உலக யோக தின பயிற்சி நீலகிரி மாவட்ட சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் உரை

உதகை, ஜூன்.21-

உலக யோகா தினத்தை முன்னிட்டு நீலகிரி MERA YUVA BHARAT அமைப்பின் சார்பாக உதகை அண்ணா உள் விளையாட்டு அரங்கில் பல்வேறு பள்ளி மாணவ மாணவியர் கலந்து கொண்ட குழு யோகா பயிற்சி வெகுசிறப்பாக நடைபெற்றது.

நீலகிரி மாவட்ட காவல் துறையின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு துணை காவல் கண்காணிப்பளர் M. சுந்தரேசன் DSP தலைமையில், மாவட்ட விளையாட்டுதுறை மேம்பாட்டு அலுவலர், மற்றும் பல்வேறு பொதுநல அமைப்பு





நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில் யோகாவின் வரலாறு, யோகா முறையாக, தொடர்ந்து செய்வதால் கிடைக்கும் நன்மைகள் பற்றி எடுத்து கூறி மாணவ மாணவியரை ஊக்க உரைமூலம் DSP அவர்கள் உற்சாகமூட்டினார். நிகழ்வில் ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.





■ கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டாட்சியர் அலுவலகத்தில், மத்திகிரி உள்வட்டத்திற்குட்பட்ட 10 கிராமங்களுக்கான 1435 ஆம் பசலி ஆண்டுக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிறைவு நாள் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் (பொது) குருநாதன், ஓசூர் வட்டாட்சியர் ஜெகதீஸ்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், தொட்டதும்மனஹள்ளி ஊராட்சி, நெல்லூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், டீல் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியின் கீழ், ரூ.37 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 2 வகுப்பறைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் திறந்து வைத்து, குத்துவிளக்கு ஏற்றி வைத்தார். உடன், டீல் நிறுவன நிர்வாக மேலாளர் என்.பி.ஸ்ரீதர், பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு திட்ட தலைவர் பாஸ்கர், திட்ட அலுவலர் பிரபு உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# தாமிரபரணி கரைகளை சீரமைக்க நடவடிக்கை

நெல்லை, ஜூன்.21-

நெல்லையில் தாமிரபரணி ஆற்றின் கரைகளை சுமார் 59 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்த ஏற்பாடு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அறிவிப்பை திருநெல்வேலி மாநகராட்சி வெளியிட்டுள்ளது. இந்த திட்டத்திற்கான முன் ஏல ஆலோசனை கூட்டம் ஜூன் 29, 2026 அன்றும், பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க கடைசி நாள் ஜூலை 22, 2026 என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# ராகுல் காந்தி பிறந்தநாள் விழா: சிறப்பு பூஜை, கேக் வெட்டி இனிப்பு வழங்கி காங்கிரஸ் கட்சியினர் கொண்டாட்டம்

கிருஷ்ணகிரி, ஜூன்.21-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில், பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு பூஜைகள், கேக் வெட்டுதல் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கும் நிகழ்ச்சிகள் உற்சாகமாக நடைபெற்றன.

இதன் ஒரு பகுதியாக, கிருஷ்ணகிரி டான்சி தொழிற்பேட்டையில் உள்ள ஸ்ரீ செல்வ விநாயகா திருக்கோவிலில் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம்.சி. ரகு தலைமையில் சிறப்பு அபிஷேகம், அலங்கார தீபாராதனை மற்றும் பூஜைகள் நடத்தப்பட்டன. ராகுல் காந்தி நீண்ட ஆயுளுடனும் நல்ல உடல்நலத்துடனும் வாழ வேண்டி சிறப்பு பிரார்த்தனைகள் செய்யப்பட்டன.

தொடர்ந்து, கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற பிறந்தநாள் விழாவில் கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். அவருக்கு காங்கிரஸ் நிர்வாகிகள் சிறப்பான வரவேற்பு அளித்தனர். பின்னர் கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கிய கோபிநாத், ராகுல் காந்தியின் தலைமையை வலுப்படுத்த கட்சியினர் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள், நகர மற்றும் வட்டாரத் தலைவர்கள், மகளிரணி, இளைஞர் காங்கிரஸ், சிறுபான்மை பிரிவு உள்ளிட்ட பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டு ராகுல் காந்திக்கு பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்தனர். இறுதியாக மாவட்ட செயலாளர் சக்கரவர்த்தி நன்றி கூறினார்.

# பழனியில் மனிதநேயத்துடன் மருத்துவ உதவி செய்து உயிரைக் காப்பாற்றிய த.வெ.க., நிர்வாகி

திண்டுக்கல், ஜூன்.21-

திண்டுக்கல் மாவட்டம் பழனி குபேரப்பட்டணம் பகுதியை சேர்ந்த தினேஷ் குமார் என்பவர் தேவஸ்தான ஊழியராக பணி செய்து வருகிறார்.

முன்னதாக இவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கோவை தனியார் மருத்து வமனையில் இவர் அனுமதிக்கப்பட்டார். அங்கு இவரின் சிகிச்சைக்கு 5 லட்சம் வரை பணம் தேவைப்படுவதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்த நிலையில் வறுமையில் வாடிக் கொண்டிருந்த தினேஷ் குமார் பழனி நகரில் பல்வேறு நபர்களிடமும், சமூக வலைதளங்களிலும் உதவி கேட்டிருந்தார்.



இதனிடையே இந்த தகவலை கேள்விப்பட்ட தமிழக வெற்றிக் கழக மாவட்ட செயற்குழு உறுப்பினர் பழனிபாலன் தனது கட்சி நிர்வாகிகளான மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜன் நகர செயலாளர் மீதுன் மாவட்ட துணை செயலாளர் நாகராஜன் நகர துணை செயலாளர் மாரிமுத்து ஆகியோரை அழைத்துக் கொண்டு தினேஷ் குமாரின் வீட்டுக்கு சென்று நலம் விசாரித்தார். அது மட்டுமின்றி மருத்துவ செலவிற்காக

பழனிபாலன் இரண்டு லட்ச ரூபாயை வழங்கினார்.

மேலும் மருத்துவ தேவைக்காக பணம் எதிர்பார்த்த நிலையில் இரண்டு லட்ச ரூபாயை தவெக நிர்வாகி பழனி பாலன் வழங்கி யதற்கு தினேஷ்குமார் குடும்பத்தினர் கண்ணீர் மல்க நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

தொடர்ந்து பழனி நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் மருத்துவ சேவை, கல்வி சேவை, பொதுமக்களின் அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை தேவைகளை பழனிபாலன் செய்து வரும் வேளையில், ஒருவரின் உயிரை காப்பாற்ற மருத்துவ உதவி செய்ததை சமூக ஆர்வலர்களும் பழனி மக்களும் பாராட்டி வருகின்றனர்.

# தேனி மாவட்டம் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 56 மாற்றுத்திறனாளிகளுக்கு தனியார் துறைகளில் பணிபுரிவதற்கான பணி நியமன ஆணை

## மாவட்ட ஆட்சித்தலைவர் வைத்திநாதன்,வழங்கினார்

தேனி, ஜூன்.21-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இணைந்து நடத்திய மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 56 மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்களுக்கு தனியார் துறைகளில் பணிபுரிவதற்கான பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், வழங்கினார்.



வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் ஒவ்வொரு மாதம் மூன்றாம் வெள்ளிக் கிழமை மாவட்டத்தில் அனைத்து பிரிவினருக்கான சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படுகிறது. தற்போது மாவட்டத்தில் முதன்முறையாக மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுரைப்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்த திட்டமிடப்பட்டு, இன்றையதினம் நடத்தப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகளுக்கு சமமான வேலைவாய்ப்புகளை வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்பதை கருத்திற் கொண்டு, தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்முகாமின் முக்கிய நோக்கம், மாற்றுத் திறனாளிகளின் கல்வித்தகுதி, திறன் மற்றும் ஆர்வத்திற்கு பொருத்தமான வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதாகும்.

இச்சிறப்பு வேலை வாய்ப்பு முகாம்கள் மூலம் மாற்றுத்திறனாளிகள் பல்வேறு தனியார் நிறுவனங்களின் பிரதி நிதிகளை நேரடியாக சந்தித்து நேர்முகத் தேர்வில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர். தனியார் நிறுவனங்கள் மற்றும் வேலைத்தேடும் மாற்றுத்திறனாளிகளை ஒரே இடத்தில் இணைப்பதன் மூலம், தனியார் நிறுவனங்களின் தேவைகளை அறிந்து, மாற்றுத்திறனாளிகள் தங்கள் திறன்களை மேம்படுத்த இதுபோன்ற முகாம்கள் உதவியாக அமையும். இதன்மூலம் வேலைவாய்ப்பிற்கான இடைவெளி குறைக் கப்பட்டு, தகுதியான நபர்கள் உடனடியாக பணியமர்த்தப் படுவ தற்கான சூழல் உருவாகிறது. இதன்மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு தன்னம்பிக்கை, சுய மரியாதை மற்றும் சமூக அங்கீகாரம் அதிகரிக்கிறது.

இம்முகாமில் 14 தனியார்துறை நிறுவனங்களும், 92 மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்களும், 40 பொதுப்பிரிவைச் சார்ந்த வேலைநாடுநர்களும் கலந்து கொண்டனர். இதில் 56 மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்களும், 11 பொதுப் பிரிவைச் சார்ந்த வேலைநாடுநர்களும் பணி வாய்ப்பைப் பெற்றுள்ளனர். கனரா வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் திறன் பயிற்சிக்கு 18 நபர்கள் விண்ணப்பித்துள்ளனர். மேலும், 1 மாற்றுத்திறனாளி வேலைநாடுநருக்கு தேனி அரசினர் தொழில் பயிற்சி நிலையத்தில் சேர்ந்து படிக்க உடனடி சேர்க்கைக்கான ஆணை யினை மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து வேலைநாடுநர்களுக்கு கடனுதவி தொடர்பான விவரங்கள் குறித்து தாட்கோ மற்றும் மாவட்ட தொழில் மையம் ஆகிய துறைகளின் அலுவலர்களால் எடுத்துரைக்கப்பட்டது. மாற்றுத் திறனாளிகளுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், தொழில்முனைவு வாய்ப்புகள் மற்றும் அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக தாட்கோ, மாவட்ட தொழில் மையம் ஆகிய துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது. மேலும், இம்முகாமில் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் மருத்துவ முகாம் அமைக்கப்பட்டு, மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ சேவைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இம்முகாமில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ரமாபிரபா, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி, மேலாளர் (தாட்கோ) .சுந்தரராஜன், உதவி இயக்குநர் (மாவட்ட தொழில் மையம்) மோகன்ராஜ், கனரா வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு நிறுவனத்தின் இயக்குநர் ஆனந்த் பாலாஜி, உதவிமேலாளர் (தாட்கோ) .ஜான்பால் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கட்டிகானப்பள்ளியில் 2700 சதுரஅடி நிலம் மற்றும் கட்டிடம் ஜூன் 24ல் பொது ஏலம்

கிருஷ்ணகிரி, ஜூன்.21-

கிருஷ்ணகிரி மாவட்டம் கட்டிகானப்பள்ளி கிராமத்தில் உள்ள M/s. SAPL Realty Corporation Limited நிறுவனத்திற்குச் சொந்தமான 2700 சதுரஅடி நிலம் மற்றும் அதில் அமைந்துள்ள கட்டிடம் வருகிற ஜூன் 24ஆம் தேதி பொது ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளதாக மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் அதிகாரம் பெற்ற அலுவலர் அ. சாதனைக்குறள் தெரி வித்துள்ளார்.



தமிழ்நாடு முதலீட் டாளர்கள் நலன் பாதுகாப்புச் சட்டம், 1997ன் கீழ், பழைய சர்வே எண் 354/7, புதிய சர்வே எண் 354/10ல் உள்ள இந்த சொத்து, ஜூன் 24 ஆம் தேதி காலை 11 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக இரண்டாம் தள கூட்ட அரங்கில் (அறை எண் 136) ஏலத்திற்கு விடப்பட உள்ளது. இதற்கான அடிப்படை விலை ரூ.65,16,079 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏல நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சார் ஆட்சியர் அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். ஏலத்தில் பங்கேற்க விரும்புவோர் விண்ணப்பங்களை ஜூன் 22ஆம் தேதி மாலை 5 மணிக்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அறை எண் 89ல் சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஏலத்திற்கு முன்பாக கிருஷ்ணகிரி வட்டாட்சியர் மற்றும் பொருளாதார குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் மூலம் சொத்தினை நேரில் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

# தியாகராஜர் பள்ளி மாணவர்களுக்கு போக்குவரத்து மற்றும் போதை எதிர்ப்பு விழிப்புணர்வு





மதுரை. ஜூன்.21-

மதுரை மாநகர காவல்துறையின் சார்பில், காவல் ஆணையர் கபில் குமார் சரத்கர் ஆணைக்கு இணங்கவும், போக்குவரத்து துணை ஆணையர் எஸ். வனிதா உத்தரவின்படியும், தெப்பக்குளம் பகுதியில் அமைந்துள்ள தியாகராஜர் நன்முறை மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தெப்பக் குளம் போக் குவரத்து காவல் ஆய்வாளர் பால் தாய், மாணவர்களிடம் சாலை பாதுகாப்பு விதிகள், போக்குவரத்து ஒழுங்குமுறைகள் மற்றும் விபத்துகளைத் தவிர்க்கும் வழிமுறைகள் குறித்து எடுத்துரைத்தார்.

மேலும், தெற்கு போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி, போதைப் பொருட்களின் தீமைகள் மற்றும் இளைஞர்கள் போதை பழக்கத்திலிருந்து விலகி இருக்க வேண்டிய அவசியம் குறித்து விழிப்புணர்வு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளித் தலைமை ஆசிரியர் அறிவழகன், தமிழ் ஆசிரியர் கார்த்திக் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பயனுள்ள ஆலோசனைகளை வழங்கினர்.

# பொதுமக்களின் குடிநீர் தட்டுப்பாட்டை போக்கிய தமிழக வெற்றிக் கழகத்தினர்! பேருந்து வசதி கோரி மனு!







மானாமதுரை, ஜூன் .21-

சிவகங்கை மானாமதுரை ஒன்றியம் மேலப்பசலை ஊராட்சிக்கு உட்பட்ட கிளங்காட்டூர் கிராமத்தில் கடந்த ஒரு மாத காலமாக குடிநீர் விநியோகம் இன்றி பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வந்தனர். இது குறித்து அப்பகுதி மக்கள் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகளிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து, தமிழக வெற்றிக் கழக மாவட்ட துணை செயலாளர் செ. செல்வி தலைமையில், மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர் கொ. செந்தூர்பாண்டியன் முன்னிலையில், பழுதடைந்திருந்த குடிநீர் மோட்டார் உடனடியாக பழுதுபார்க்கப்பட்டு, சரி செய்யப்பட்டது. இதன் மூலம் ஒரு மாத காலமாக நீடித்து வந்த குடிநீர் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டு, பொதுமக்களுக்கு தங்குதடையின்றி தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டது. தங்களின் நீண்ட நாள் துயரை துரிதமாக தீர்த்து வைத்த தவெக நிர்வாகிகளுக்கு கிராம மக்கள் நெஞ் சார்ந்த நன்றியைத் தெரி வித்துக் கொண்டனர்.

ஆ.நெடுங்குளம் கிராமத்திற்கு பேருந்து வசதி கோரி மனு:

அதேபோல், மேலப்பசலை ஊராட்சி கிளங்காட்டூர் மற்றும் ஆ. நெடுங்குளம் ஆகிய கிராமங்களுக்கு போதிய பேருந்து வசதி இல்லாததால் பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ, மாணவிகள் மற்றும் வேலைக்குச் செல்லும் பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

எனவே, இப்பகுதிக்கு கூடுதல் பேருந்து வசதி தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, தமிழக வெற்றிக் கழக மாவட்ட துணை செயலாளர் செ. செல்வி மற்றும் மாவட்ட தொண்டரணி இணை அமைப்பாளர் கொ. செந்தூர்பாண்டியன் ஆகியோர் முன்னிலையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பொது மக்கள் தரப்பில் கோரிக்கை மனு அளிக்கப் பட்டது. இக்கோரிக்கையையும் விரைவில் நிறைவேற்றித் தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தவெக நிர்வாகிகள் உறுதி அளித்துள்ளனர்.

# உதகை மாவட்ட கால்நடைப் பண்ணையில் 20 பொலிகாளைகள்; இப்பண்ணை வளாகத்தில் ஏலக்குழுவின் மூலம் பொது ஏலம் விடப்படும்

நீலகிரி, ஜூன்.21-

உதகமண்டலம், மாவட்ட கால்நடைப் பண்ணையில் கழிவு செய்யப்பட்ட 20 எண்ணிக்கை யிலான பொலிகாளைகள் எதிர் வரும் 30.06.2026 அன்று காலை 11.00 மணியளவில் இப்பண்ணை வளாகத்தில் ஏலக்குழுவின் மூலம் பொது ஏலம் விடப்படும்.

நிபந்தனைகள் மேற்படி கால் நடைகள் பொது ஏலத்தில் கலந்து கொள்வோர் ஏல முன்வைப்புத் தொகை ரூ.5000/ (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

ஏலத்தில் கலந்து கொள்வோர் கால் நடைகளை அலுவலக நாட்களில் காலை 10.30 மணி முதல் மாலை 4.30 வரையிலான நேரத்தில் பார்வையிடலாம். ஏல நிபந்தனைகளை அலுவலக நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலும், பொது ஏலம் தொடர்பான விவரங்களுக்கு தொலைபேசி எண். 80722 31345 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

ஏலத்தினை ஒத்தி வைக்கவோ, மறு தேதி நிர்ணயம் செய்யவோ, நிறுத்தவோ உதகமண்டலம், மாவட்ட கால்நடைப்பண்ணை, துணை இயக்குநருக்கு முழு அதிகாரம் உண்டு. ஏலத்தினை போது ஏலதாரர் சட்டத்திற்கு புறம்பாக தர குறைவாக நடந்து கொண்டால் (டேவணித் தொகை) முன்பணத் தொகை ரூ.5000/ (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) பறிமுதல் செய்யப்படும்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டாட்சியர் அலுவலகத்தில், மத்திகிரி உள்வட்டத்திற்குட்பட்ட 10 கிராமங்களுக்கான 1435 ஆம் பசலி ஆண்டுக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிறைவு நாள் நிகழ்ச்சியில், 65 பயனாளிகளுக்கு ரூ.2 இலட்சத்து 8 ஆயிரத்து 100 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் வழங்கினார். உடன், தனி மாவட்ட வருவாய் அலுவலர் ராஜா (உதவி நிலவரித்திட்டம்), துணை ஆட்சியர் (பயிற்சி) சௌமியா,மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் (பொது) குருநாதன், ஒசூர் வட்டாட்சியர் ஜெகதீஸ்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.





# ஸ்ரீ வலம்புரி செல்வ விநாயகர் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் விழா

மாதவரம், ஜூன்.21-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி காந்திநகர் கலைஞர் குறுக்கு தெரு மற்றும் பெரியார் தெரு சந்திப்பில் அமைந்துள்ள அருள்மிகு ஶ்ரீ வலம்புரி செல்வ விநாயகர் ஆலயத்தில் ஜீரணோத்தாரண புனராவர்த்தன நூதன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் விழா ஆலய நிர்வாகிகள் ரமேஷ், கணேசன், ரகுகுராஜ், விக்னேஷ்வரன், சரவணன், சிவா, வாசு, பன்னீர் செல்வம், யுவராஜ், செல்லைய்யா, விஜயகுமார், குட்டி, பூசாரி என்.சண்முகம் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.நிகழ்ச்சியில் விக்னேஷ்வரபூஜை, கணபதி ஹோமம், நவக்கிரகம் ஹோமம், சங்கல்பம், கோபூஜை, யாகசாலை பூஜை, வாஸ்துசாந்தி, பிரவேசபலி, அங்குரார்ப்பணம், பூர்ணாஹூதி, புண்ணியாவாசனம், கலசபூஜை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள், ஹோமங்கள் நடைபெற்றது. பின்னர் யாகசாலையில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்ட புனிதநீர் கலசங்களை மேளதாளத்துடன் கொண்டு சென்று ஆலய விமானம் மற்றும் மூலவர் உள்ளிட்ட பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து புனிதநீரை பக்தர்கள் மீது தெளித்தனர்.பின்னர் சுவாமிகளுக்கு சிறப்பு அலங்காரம் செய்து தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இவ்விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக மாதவரம் சட்டமன்ற தவெக உறுப்பினர் எம்.எல்.விஜய்பிரபு, பிஎம்.ஜி.சீனிவாசன், கே.எம்.டில்லி, பொன்.கோதண்டன், ஏழுமலை, காந்திநகர் கிராம நிர்வாகிகள் ஞானசேகர், வழக்கறிஞர்கள் சீனிவாசன், தேவராஜ், மற்றும் சுகுமார் உட்பட ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார், தலைமையில் (19.06.2026) அன்று நடைபெற்றது. உடன் மாவட்ட வன அலுவலர் மகேந்திரன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மாவட்ட வருவாய் அலுவலர் /செயலாட்சியர் இராஜலட்சுமி, வேளாண்மை இணை இயக்குநர் மணி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் தமிழ்நங்கை, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.இளவரசன், உதவி இயக்குநர் ஊராட்சிகள் மகாதேவன், முருகன், வேளாண்மை துணை இயக்குனர் மோகன் சகாயராஜ், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.





# சிறப்பு கஞ்சா கண்காணிப்பு நடவடிக்கை

மாதவரம், ஜூன்.21-

கஞ்சா மற்றும் போதைப்பொருள் தொடர்பான சட்டவிரோத செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில், ஆவடி காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக சிறப்பு கஞ்சா விற்பனை தடுப்பு சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. ஆவடி காவல் ஆணையாளர் நேரடி அறிவுறுத்தலின் பேரில், 100 காவலர்களைக் கொண்ட 30 கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, போதைப் பொருள் தொடர்பான செயல் பாடுகளை கண் காணித்தல், ரகசிய தகவல்களை சேகரித்தல் மற்றும் போதைப்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் பயன்படுத்துவோரை அடையாளம் காணுதல் ஆகிய பணிகளுக்காக அடையாளம் காணப்பட்ட 128 முக்கிய இடங்களில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். இந்நடவடிக்கையின்போது சுமார் 53 கிலோ கஞ்சா, 83 டேபென்டடால் மாத்திரைகள் மற்றும் ஏராளமான ஊசிகள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், கஞ்சா விற்பனை நடைபெறும் இடங்கள் மற்றும் விற்பனையாளர்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு எதிராக தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், இச்சிறப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருள் மற்றும் மயக்க மருந்து தடுப்புச் சட்டம் கீழ் 27 வழக்குகளும், போதைப்பொருள் தாக்கத்தில் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்ததற்காக 5 வழக்குகளும், சந்தேகத்திற்கிடமான போதைப்பொருட்கள் மற்றும் மாத்திரைகள் வைத்திருந்ததற்காக 3 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன.

கஞ்சா பயன்படுத்திய 17 முதல் 19 வயதுக்குட்பட்ட 16 இளைஞர்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப் பட்டு அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டனர். மேலும், இந்த ஒரு வார கால சிறப்பு நடவடிக்கையின்போது சட்டத்தின் கீழ் 25 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர்.2026 ஆம் ஆண்டில் இதுவரை ஆவடி காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 1136 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், கஞ்சா கடத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபட்ட 50க்கும் மேற்பட்ட குற்றவாளிகள் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். போதைப் பொருள் தொடர்பான குற்றங்களைத் தடுப்பதற்கும், போதைப் பழக்கத்தை ஒழிப்பதற்கும் ஆவடி காவல் ஆணையரகம் தொடர்ந்து தீவிர கண்காணிப்பு மற்றும் சட்ட அமலாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

# உதகையில்உலக குருதி கொடையாளர் தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் கொடியசைத்து துவக்கி வைத்தார்




நீலகிரி, ஜூன்.21-

நீலகிரி மாவட்டம், உதகை சேரிங்கிராஸ் பகுதியில், உலக குருதி கொடையாளர் தினத்தை முன்னிட்டு, உதகை, செவிலியர் பயிற்சி பள்ளி மாணவிகள் மற்றும் இரத்த வங்கி ஊழியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு கொடியசைத்து துவக்கி வைத்தார்.

நீலகிரி மாவட்டத்தில் தேசிய குருதி கொடையாளர் தினத்தை முன்னிட்டு, உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் இரத்த வங்கி, தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், தமிழ்நாடு மாநில குருதிப் பரிமாற்றுக் குழுமம் மற்றும் ரெட் கிராஸ் சார்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் உதகை செவிலியர் பயிற்சி பள்ளி மாணவிகள் என சுமார் 100க்கும் மேற்பட்ட மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகள் உடன் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். இப்பேரணியானது, உதகை சேரிங்கிராஸ் பகுதியில் தொடங்கி, கமர்சியல் சாலை வழியாக உதகை சேட் மருத்துவமனைக்கு சென்று நிறைவடைந்தது.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:

உலக குருதி கொடையாளர் தினத்தை முன்னிட்டு, இன்று பொதுமக்களிடையே குருதி தானம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பேரணி துவக்கி வைக்கப்பட்டது. ஆண்டு தோறும் 2,000 முதல் 2,100 தன்னார்வர்கள் மூலம் இரத்த தானம் நடைபெறுகிறது. இந்த முகாமின் மூலம் உதகை, குன்னூர், கோத்தகிரி, கூடலூர் என அனைத்து பகுதியில் உள்ள பொதுமக்களும் பயனடைந்து வருகின்றனர். 18 வயது முதல் 60 வயது வரை உள்ளவர்கள் இரத்ததானம் செய்யலாம் எனவும், மூன்று மாதத்திற்கு ஒரு முறை இரத்ததானம் செய்யலாம் எனவும் மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டது. ஆகவே, இரத்தத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு தன்னார்வலர்கள் இரத்த தானம் செய்வதன் அவசியம் குறித்து நண்பர்கள், உறவினர்கள் மற்றும் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், குருதி கொடையாளர் தினத்தை முன்னிட்டு, சேரிங்கிராஸ் பகுதியில் உலக குருதி கொடையாளர் தின உறுதி மொழியினை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில், உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.சீனிவாசன், உதவி உறைவிட மருத்துவ அலுவலர்கள், மரு.வினோத், மரு.நளினி இரத்த வங்கி மருத்துவ அலுவலர் மரு.அர்ச்சனா உட்பட தன்னார்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161